# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),**
***********

**முறையீட்டு மனு எண்: 211/2018/பே**
**ஆணை நாள் 31 –12–2018**

**திரு. R.சோமசுந்தரம்,**
**343, மெயின் ரோடு,**
**பெண்ணாடம்,**
**கடலூர் மாவட்டம்– 606105.** ----- **முறையீட்டு மனுதாரர்.**

**செயல் அலுவலர்,**
**பெண்ணாடம் பேரூராட்சி,**
**கடலூர் மாவட்டம்.** -- **எதிர் மனுதாரர்.**

**ஆணை.**

கடலூர் மாவட்டம், பெண்ணாடம் மெயின் ரோடு, எண்.343 என்ற முகவரியில் வசிக்கும் திரு.ஆர். சோமசுந்தரம் என்பவரது 10.10.2018 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 12.10.2018ல் பெறப்பட்டு, முறையீட்டு மனு எண்.211/2018 என எண்ணிடப்பட்டது. முறையீட்டு மனு மீதான அறிக்கைகள் பெறப்பட்டு, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில், தானும் தனது தம்பி மகனும் பெண்ணாடம் பேரூராட்சி எல்லையில் ராதாகிருஷ்ணன் அவின்யூ, கிருஷ்ணன் நகர் எனும் மனைப்பிரிவுகள் அமைத்துள்ளதாகவும், அதற்கு 08.06.2018 அன்று விழுப்புரம் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநரால் கொள்கை அளவு ஒப்புதல் வழங்கப்பட்டதாகவும், இதன் சாலைகள் மற்றும் திறந்தவெளி ஒதுக்கீடு பெண்ணாடம் பேரூராட்சிக்கு 20.08.2018ல் பத்திர பதிவு மூலம் ஒப்படைக்கப்பட்டதாகவும், மேற்படி கொள்கை அளவு ஒப்புதல் கடிதப்படி வரன்முறைக் கட்டணம் 04.08.2018ல் கருவூலத்தில் செலுத்தப்பட்டதாகவும், வளர்ச்சிக்

கட்டணம் ICICI வங்கி 22.08.2018 நாளிட்ட வரைவோலை மூலம் 05.09.2018ல் செயல் அலுவலரிடம் நேரில் வழங்கப்பட்டதாகவும், இதற்கான அறிவிப்பினை வழங்கவேண்டிய பேரூராட்சி செயல் அலுவலர், 19.06.2018 நாளிட்ட அறிவிப்பாணையினை 08.10.2018 அன்று தான் கடலூாில் முறையிட்ட பின்பு 110 நாட்கள் தாமதமாக வழங்கியதாகவும், இதனையும் தனது தம்பி மகனுக்கு வழங்கவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

வரைபடம் வரன்முறை தொடர்பான 05.09.2018 நாளிட்ட கடிதம் வழங்கியும் அதற்கான வரைபடத்தினை பலமுறை கேட்டும் வழங்கவில்லை எனவும், 21.09.2018 அன்று பேரூராட்சியில் இருந்து பெறப்பட்ட அழைப்பினைத் தொடர்ந்து தான் பேரூராட்சிக்கு சென்ற போது அனுமதி உத்திரவு மட்டும் வழங்கி, வரைபடம் வழங்காததால் அதனை தான் வாங்கவில்லையெனவும், 22.09.2018ல் இது தொடர்பாக செயல் அலுவலர், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், கடலூர் மாவட்ட ஆட்சியர் ஆகியோர்களுக்கு பதிவு அஞ்சல் மூலம் கடிதம் அனுப்பியதாகவும், இதனை பார்த்த மேற்படி பேரூராட்சி பொறுப்பு செயல் அலுவலர் பேரூராட்சி மேஸ்திரி மூலம் மேற்படி மனைப்பிரிவு வரைப்படத்தினை எடுத்துக் கொண்டு மங்கலம்பேட்டை பேரூராட்சிக்கு வந்தால் வரன்முறைப்படுத்தி கையொப்பமிடுவதாக தகவல் அனுப்பியதாகவும், இது சம்பந்தமாக தன்னால் 08.10.2018 மக்கள் குறை கேட்பு கூட்டத்தில் வழங்கப்பட்ட புகாரினை மாவட்ட வருவாய் அதிகாரி பார்வையிட்டு உடன் மேற்படி வரைபடம் வழங்க உத்திரவிட்டதாகவும், இதன் நகலினை கடலூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரிடம் நேரிடையாக தான் வழங்கியபோது, பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் செயல் அலுவலரிடம் அலைபேசி மூலம் உடன் மேற்படி வரைபடத்தினை வரன்முறைப்படுத்தி வழங்க கூறியதாகவும், இதன் அடிப்படையில் மூன்று மனைப்பிரிவுகளின் வரைபடம் வரன்முறைப்படுத்தப்பட்டு, 21.09.2018 தேதியிட்டு 08.10.2018 அன்று 16 நாட்கள் தாமதமாக தனக்கு வழங்கப்பட்டதாகவும், இது குறித்து உரிய விசாரணை மேற்கொள்ள கோரி தனது முறையீட்டு மனுவினை சமர்ப்பித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 17.10.2018 நாளிட்ட அறிவிப்பாணையில் மேற்படி முறையீட்டு மனு தொடர்பான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்கத் தெரிவித்து கடலூர் மாவட்டம், பெண்ணாடம் பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

இம்முறைமன்ற நடுவ 16.11.2018 நாளிட்ட அழைப்பாணையில் மேற்படி பொருள் தொடர்பான விளக்கத்தினை பதிவு செய்ய இம்முறைமன்ற நடுவத்தில் 26.12.2018ல் ஆஜராகத் தெரிவித்து முறையீட்டு மனுதாரருக்கு ஆணையிடப்பட்டது.

09.11.2018 நாளிட்ட கடலூர் மாவட்டம், பெண்ணாடம் பேரூராட்சி செயல் அலுவலரின் கடிதத்தில் கடலூர் மாவட்டம், பெண்ணாடம் பேரூராட்சி எல்லைக்குட்பட்ட ராதாகிருஷ்ணன் அவென்யூ, கிருஷ்ணா நகர் மற்றும் கிருஷ்ணா நகர் விரிவு என பெயரிட்டு இதில் நகர் ஊரமைப்பு இயக்குநர் அலுவலகத்தில் ஒப்பதல் பெற்று, பேரூராட்சியில் அங்கீரரம் பெறப்படாமல் ஏற்கனவே தன்னிச்சையாக மனைப்பிரிவுகளாக எண்ணிட்டு பிரித்து திரு.ஆர்.சோமசுந்தரம் மற்றும் திரு.பூவராகவன் ஆகியோரால் அரசின் விதிமுறைகளுக்கு எதிராகவும், புறம்பாகவும் பல மனைகளை விற்னை செய்து விட்டதாகவும், தற்போது அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளை பத்திரப் பதிவு செய்யக்கூடாது என அரசாணை வெளியிட்ட பின்னர் விற்பனை செய்ய முடியாமல் உள்ள மனைகளுக்கு அரசாணையின்

அடிப்படையில் அரசின் கொள்கையளவு ஒப்புதல், நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களிடம் பெற்று பேரூராட்சி அலுவலகத்தில் சமர்ப்பித்ததாக தெரிவித்துள்ளார்.

பெண்ணாடம் பேரூராட்சியில் எழுத்தர் பணியிடங்கள் காலியாக உள்ள நிலையில் இப்பணியினை மேற்கொள்ள உரிய எழுத்தர் இல்லாத பட்சத்தில் தற்சமயம் உள்ளாட்சி தேர்தல் வார்டு வரையறை பணிகள், சொத்து வரி சீராய்வு, டெங்கு காய்ச்சல், பன்றிக் காய்ச்சல் போன்ற நோய்களுக்கான தடுப்பு நடவடிக்கைக்கான களப்பணிகள் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ளும் துப்புரவு மேற்பார்வையாளர் மூலம் இப்பணியினை செய்து விண்ணப்பதாரர் திரு.ஆர்.சோமசுந்தரம் என்பவருக்கு மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்கப்பட்டதாகவும், உத்திரவு கையொப்பமிட்டு உரிய தேதியில் பணிச்சுமை காரணமாக அன்னாரது வீட்டிற்கு உடன் சேர்ப்பிக்க இயலவில்லை எனவும், இதில் எவ்வித உள் நோக்கமும் இல்லை எனவும், மங்கலம்பேட்டை பேரூராட்சியில் செயல் அலுவலராக பணியில் இருக்கும் தன்னை பெண்ணாடம் பேரூராட்சியில் கூடுதல் பொறுப்பாக மாவட்ட ஆட்சியரால் நியமிக்கப்பட்டுள்ளதால், இரண்டு பேரூராட்சிகளின் பணிச்சுமை காரணமாகத்தான் மேற்படி நபருக்கு மனைப்பிரிவு அங்கீகாரம் காலதாமதமின்றி கையொப்பமிட்டு வழங்க ஏதுவாக அன்னாரை நேரில் எடுத்து வரச்சொல்லி அனுப்பி வைக்கப்பட்டதாகவும் இதில் எந்தத் தவறும் இல்லை எனவும் தனது அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார்.

26.12.2018ல் இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான முறையீட்டு மனுதாரர் தனது வாக்குமூலத்தில், 10.10.2018 நாளிட்ட புகார் மனு தன்னால் அனுப்பப்பட்டது எனவும், பெண்ணாடம் பேரூராட்சி அருகில் ராதாகிருஷ்ணன் அவென்யூ, கிருஷ்ணன் நகர் மனைப்பிரிவுகள் அமைக்கப்பட்டதாகவும், நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் ஒப்புதல் பெறப்பட்டு திறந்தவெளி ஒதுக்கீடு பேரூராட்சிக்கு வழங்கிட 20.08.2018ல் சார் பதிவாளர் அலுவலகத்தில் பத்திரம் பதிவு செய்யப்பட்டதாகவும், வரன்முறைக்கட்டணம் 04.08.2018ல் கருவூலத்தில் செலுத்தப்பட்டதாகவும், வளர்ச்சிக் கட்டணம் 22.08.2018 நாளிட்ட வரைவோலை 05.09.2018 கடிதம் மூலம் நேரில் வழங்கப்பட்டதாகவும், இந்த காலதாமதம் அவர்கள் வங்கிக் கணக்கு கொடுக்காததினால் ஏற்பட்டதாகவும், செயல் அலுவலர் 19.06.2018 நாளிட்ட அறிவிப்பாணையினை 08.10.2018 அன்று மாலை 3.30 மணிக்கு, அதுவும் தான் முறையிட்ட பின்னர் 143 நாட்கள் தாமதித்து வழங்கியதாகவும், தன்னுடைய தம்பி மகன் திரு.பூவராகவனுக்கு அறிவிப்பு நோட்டீஸ் வழங்கப்படவில்லையெனவும், வரைபடம் வரன்முறை தொடர்பாக 05.09.2018 கடிதம் வழங்கியும் பலமுறை நேரில் கேட்டும் வரைபடம் வழங்கவில்லையெனவும், 21.09.2018 அன்று பேரூராட்சியில் இருந்து வந்த அழைப்பின் அடிப்படையில் சென்ற போது 20.09.2018 நாளிட்ட அனுமதி உத்திரவு மட்டும் வழங்கி வரைபடம் வழங்காததால் தான் அதனை வாங்கவில்லையெனவும், இது தொடர்பாக 22.09.2018ல் செயல் அலுவலர், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோர்களுக்கு பதிவு அஞ்சல் மூலம் மனு அனுப்பியதாகவும், அதன்பின்னர் செயல் அலுவலர் திரு.முருகன், பேரூராட்சி மேஸ்திரி மூலம் மங்கலம்பேட்டைக்கு தான் வரைபடத்தை எடுத்து வந்தால் வரன்முறைப்படுத்தி கையெழுத்து இடுவதாக தெரிவித்ததாகவும், மற்ற அலுவலக கோப்புகளை அலுவலக நபர்கள் மூலம் எடுத்துச் செல்லும்போது தன்னை மட்டும் நேரடியாக வந்து கையொப்பம் வாங்கிச் செல்லுமாறு கூறியது கேள்விக்குறியாக உள்ளதாக தெரிவித்துள்ளார். பின்னர் மாவட்ட வருவாய் அலுவலர்,

பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் ஆகியோரின் அறிவுரையின்படி 3 மனைப் பிரிவுகளின் வரைபடம் வரன்முறைப்படுத்தப்பட்டு 21.09.2018 தேதியிட்டு, 08.10.2018 மாலை 3.30 மணிக்கு 16 நாட்கள் தாமதமாக தனக்கு வழங்கப்பட்டதாகவும், முன்பு வழங்கப்பட்ட 20.09.2018 தேதியிட்ட உத்திரவிற்கு பதிலாக 21.09.2018 தேதியிட்ட வரைபடமும், உத்திரவும் வழங்கப்பட்டதாகவும் கால தாமதம் செய்ததற்கு சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் தனது வாக்கு மூலத்தில் தெரிவித்துள்ளதுடன், 1998ம் ஆண்டு தங்களுடைய பூர்வீகமாக இருந்த நிலத்தில் பிளாட் போடப்பட்டது எனவும் அப்போது வரன்முறைப்படுத்தும் திட்டம் வரவில்லையெனவும், 2017, மே மாதம் வரப்பெற்ற வரன்முறை குறித்த புதிய திட்டத்தின் அடிப்படையில் தன்னால் மனு சமர்ப்பிக்கப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரர் குறிப்பிட்டுள்ளது போல் வரைபட அனுமதி வழங்குவதில் கால தாமதம் ஏற்பட்டுள்ளது வாக்குமூலங்கள்/அறிக்கைகள் மூலம் உறுதியாகிறது. இருப்பினும் செயல் அலுவலர் கால தாமதத்திற்கான விளக்கங்களை சமர்ப்பித்துள்ளார். மேலும் முறையீட்டு மனுதாரர், பேரூராட்சி செயல் அலுவலர் தன்னிடம் பணம் கோரியதாகவோ அல்லது பலன் எதிர் நோக்கியதாகவோ குறிப்பாக எவ்வித ஊழல் புகாரும் தெரிவிக்கவில்லை. இந்நிலையில் இது போன்ற புகார்களுக்கு இனி இடமளிக்காத வகையில் காலதாமதமின்றி செயல்படவேண்டுமென செயல் அலுவலருக்கு வலியுறுத்தி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018–ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

–//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–

செயலாளர்.

பெறுநர்

1.திரு. க.[illegible]
343, மெயின் ரோடு,
பெண்ணாடம்,
கடலூர் மாவட்டம்– 606105.

2.செயல் அலுவலர்,
பெண்ணாடம் பேரூராட்சி,
கடலூர் மாவட்டம்.

3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகம்,
கடற்கரை சாலை,
கடலூர்–620007.